௨௬.

A. சாமி நான் செல்வக்கிளி வாய்திறந்து

செல்வக்கிளி வாய்திறந்து

B. ஆமா

A நா சீல மேலாசையில்லே சீல மேலாசையில்லே

B. ஆமா.

A நீங்க சீலக்கை நூறு சிறுநகையுமுன்னூறு

B. ஆமா

A நாஞ்சீலே மடிச்சுடுத்தி சீலே மடிச்சுடுத்தி

B. ஆமா.

A நா சிறுநகையை மேலணிந்து

சிறுநகையை மேலணிந்து

B. ஆமா

A சாமி திருனவல்லி பயணமின்னு

திருனவல்லி பயணமின்னு

B ஆமா

A திருனவல்லித் தேவடியா திருனவல்லித் தேவடியா

B. ஆமா

A எஞ்சீலே குறைச் சலைம்பா

சிறுநகையுங் கம்பியிம்பா

B. ஆமா

A. நா சிந்திட்டேங் கண்ணீரே
சிந்தியிட்டேங் கண்ணீரே

B. ஆமா.

---

<u>பழனிப்பறையன்</u> A

A. ஆதிசிவங் கருத்தாவே

B. ஆமா

A. <u>மத்</u>தாளக் காரண்ணு மாரப்பா தீரப்பா

B. ஆமா.

A. இனி ஆங்கிளியே அஞ்சிவர

B. ஆமா.

A. சிக்கிலேயோ சார்ஙியோ

B. ஆமா.

A. சாராயப் போதையிலே நீ சாஞ்சு கட்டு <u>மத்</u>தாளம்
சாஞ்சு கட்டு <u>மத்</u>தளம்.

B. ஆமா. மா..

A. எங் கொல்லிமில நீங்க வெட்டடி அய்யோ
இருவளமே

B. ஆமா.

A. நா கோதிலையா வீடு கட்டடி

B. ஆமா.

A. ஸ்ரீ பாரியையா வீட்டிலே இப்பநா பாதி நாள்
வாழுலையே பாதி நா வாழுலையே.

B. பாதி நா வாழலையே

A. எட்டு நா கட்டை வெட்டி
எல்லையிலே தீ மூட்டி

B. ஆமா.

A. இப்ப எல்லை நெருப்பிலே ஏன் கழுவ
வெச்சீரோ

B. ஆமா.

A. நா பத்து நாக் கட்டை வெட்டி
பாதையிலே தீ மூட்டி

B. ஆமா

A பாதை நெருப்பிலே பாத்தழுக வச்சீரோ
பாத்தழுகோ வச்சீரோ

B. பாத்தழுக வச்சீரோ

A B. ஐ ஐ ஹோ

A ஆகா ஆகாசத்தன்னில் பறக்கும் கெருடனல்ல,

அப்பனையா வாய் வீசு அனுமாரல்ல வாதான

௨௭.

கண்ட பெரியோர்கள் . . . . . .

B. . . . . . .

A. வேலா வுனக் கென்ன வேலாவுனக் கென்ன

அடியார்கள் மோக விசனமின்றி.

B. ஆ . . .

A. வாலயிலே வந்து காத்தருள்வீர் வடிவேலவனே

B. ஆ

A. நீல மனைத செய்ய மங்கையாருடனே ~~வந்து~~ எதிர் கொண்டு

B. ஆ . . .

A. வாளமிருத்திடவே வானஏ வடிவேலனே

B. வேலவனே.

A.

31.

A. சித்திரை மாசத்திலே எஞ்சாமிதுரை ராசாவே

B. ஆமா

A. நம்ம சித்திரைத்தேர் ரோடையில
சித்திரைத்தேரோடையிலே

B. ஆமா

A. நா செல்வக்கிளி வாய்திறந்து
செல்வக்கிளி வாய் திறந்து

B. ஆமா

A. எஞ்சாமி நா சேலை மேலாசையின்னு
சேலை மேலாசையின்னு

B. ஆமா.

A. சாமி நீங்க சேலக்கய்நூறு சிறுநகைய
மூன்னூறு

B. ஆமா.

A. நா சீலே மடிச்சுருத்தி சீலே மடிச்சுருத்தி

B. ஆமா.

A. நா திருனவல்லி பயணமின்னு திருனவல்லி
பயணமின்னு

B. ஆமா.

A. எங்க திருனவல்லித்தேவடியா

௩௨.

A. எங்க சின்னப் பொறப்போட

சீரழியுந்தம்பியோட

B. ஆமா

A. நாஞ்சிந்திட்டேங் கண்ணீரே

சாமி சிந்திட்டேங் கண்ணீரே

×

A. நாங் கார்த்திகை மாதத்திலே

எஞ்சாமி துரை ராசாவே

B. ஆமா

A. நம்ம கருவூர்த் தேரோடையிலே

கருவூர்த் தேரோடையிலே

B. ஆமா.

A. நா கண்ணகியா வாய்திறந்து

கண்ணகியா வாய்திறந்து

B ஆமா..

A. நா காப்பு மேலாசையின்னே காப்பு மேலாசையின்னே

B. ஆமா.

A. சாமி நீங்க காப்புக்கை நூறு

33.

A. காஞ்சிபுரம் பயணமின்னு காஞ்சிபுரம் பயணமின்னு

B. ஆமா

A. காஞ்சிபுரத் தேவடியா காஞ்சிபுரத் தேவடியா

B. ஆமா.

A. என்னை காப்புங்கருக்குதிம்பா
கழுத்து நகை கம்மியிம்பா

B. ஆமா

A. நானுந்தச் சொல்லைக் கேட்டல்லவோ
அந்தச் சொல்லைக் கேட்டல்லவோ

B. ஆமா

A. நாஞ்சின்ன புறப்போடு சீராழியுந்தம்பியோடு

B. ஆமா.

A. நாஞ்சிந்திட்டேங் கண்ணீலே
திந்திட்டேங் கண்ணீலே

B. போடு...

X

---

A. பாக்கு மரங்கானலிலே பாக்கு மரங்கானலிலே

B. ஆமா

A. எஞ்சாமிதுரை ராசாவே சாமிதுரை ராசாவே

A. உங்களுக்கு பக்குவமா வந்ததென்ன
பக்குவமா வந்ததென்ன

B. ஆமா.

A. நீங்க பரமனுட தங்கரதமேறி
தங்கரதமேறி

B. ஆமா.

A. சாமி பரமனுட வாசலுக்கு
பரமனுட வாசலுக்கு

B. ஆமா.

A. சாமி பறந்தோடிப் போனீரோ
பறந்தோடிப் போனீரோ

B. ஆமா.

A. உங்களுக்கு வந்ததொரு பாவி
வந்ததொரு பாவி

B. ஆமா

A. நா பரிதவிக்க நாளாச்சோ
பரிதவிக்க நாளாச்சோ

B. ஆமா

A. நீங்க பாவியுட வாசலுக்கு
சாமி பாவியுட வாசலுக்கு

B. ஆமா.

B ஆமா

A நாம ரெண்டு பேருஞ் செண்டாடும் வேளையிலே
செண்டாடும் வேளையிலே

B ஆமா

A அந்த தேவருட தங்கரதம்
தேவருட தங்கரதம்

B ஆமா

A உங்களுக்கு இட்டமா வந்ததென்ன
இட்டமுடன் வந்ததென்ன

B ஆமா

A நீங்க தேவருட தங்கரதமேறி
தங்காரதமேறி

B ஆமா

A இந்த தேவருட வாசலுக்கு
தேவருட வாசலுக்கு

B ஆமா

A சாமி திட்டமுடன் போனீரோ
திட்டமுடன் போனீரோ

B ஆமா

A சாமி உங்களுக்கு வந்தாதொரு சீதை
வந்தது தொரு சீதை

B ஆமா

40

A. என் தாயே எடுக்காதேங்கோ
தாயே எடுக்காதேங்கோ

B. ஆமா.

A. ஒரு தனிவிளக்கே வெச்சிருங்கோ
தனி விளக்கே வெச்சிருங்கோ

B. ஆமா.

X

A. சித்திரை மாசத்திலே
எஞ்சாமிதுரை ராஜாவே

B. ஆமா.

A. நம்ம சித்திரைத் தேரோடையிலே
சித்திரைத் தேரோடையிலே

B. ஆமா.

A. நா செல்வக்கிளி வாய்திறந்தா
செல்வக்கிளி வாய் திறந்தா

B. ஆமா.

A. சாமி நா சீலை மேலாசையின்னு
சீலை மேலாசையின்னு

B. ஆமா

A. நீங்க சீலைக்கய் நூறு சிறுநகைய முன்னூறு

B. ஆமா

A. நான் சீலை மடிச்சுக்கி சீலை மடிச்சுக்கி

41.

A· எந்தன் சீலை நுரைச்சீ லெவ்பா
சிறுநகையுங் கம்பியிம்பா

B· ஆமா.

A· நானுந்தச் சொல்லெக் கேட்டல்லலே
அந்தச் சொல்லைக் கேட்டல்லவோ

B· ஆமா.

A· எந்தன் சின்ன பெறப்போடு
சீரழியுந்தம்பி யோடு

B· ஆமா.

A· நா சிந்திட்டேங் கண்ணீரே
சிந்திட்டேங் கண்ணீரே

X

41

A· ஆத்துச் சிறுகீரை ஆத்துச் சிறுகீரை

B· ஆமா.

A· எஞ்சாமிதுரை ராசாவே சாமிதுரை ராசாவே

B· ஆமா.

A· இந்த அரமனைக்கு மேகீரை
அரமனைக்கு மேகீரை

B· ஆமா

A· நா அங்கிலருத்தான்று அங்கிலருந்தான்று

B· ஆமா.

A இந்தக் கொளத்துச் சிறகீரே
கொளத்துச் சிறகீரை

B ஆமா

A எஞ்சாமி துரை ராசாவே
சாமி துரை ராசாவே

B ஆமா

A இந்தக் கோயலுக்கு மேகீரே
கோயலுக்கு மேகீரை

B ஆமா

A நா கொழந்தையிலே அறுத்தானு
கொழந்தையிலே அறுத்தானு

B ஆமா

A இந்தக் கோயலுக்குந்தன்று வழி
கோயலுக்குந்தன்று வழி

B ஆமா

A கன்னி/ப்புளி/யமரமோ எஞ்சாமிதுரை ராசாவே

B ஆமா

A இந்தக் கருந்தருட நெல்லிமரோ
கருந்தருட நெல்லிமரம்

B ஆமா

னென்று னென்று

43.

B. ஆமா.

A. இந்த பீலிகட்டி ஏருமவோ
பீலிகட்டி ஏருமவோ

B. ஆமா

A. நா பிஞ்சிலதுப்ப னென்று பிஞ்சிலதுப்ப னென்று

B. ஆமா

A. எம் புத்தியெயுந் தட்டுலயே
புத்தியிலு ந்தட்டிலே

---

A. நா பச்சை சைக்கிள் வண்டி
பச்சை சைக்கிள் வண்டி

B. ஆமா.

A. என்னக் கொண்டு பாண்டியரு மேரு வண்டி
பாண்டியரு மேரு வண்டி

B. ஆமா

A. நீங்க பழனி மலை பச்சே சைக்கிளேறி
ஞ்சாமி பச்சே சைக்கிளேறி

B. ஆமா.

A. நீங்க பழனி மலை வேச யெறங்கி

A. நம்ம பழனிமலை வேலவரு
பழனி மலை வேலவரும்

B. ஆமா

A. இந்த பச்சையுள்ள பிள்ளையென்று
பச்சையுள்ள பிள்ளையென்று

B. ஆமா.

A. பாதத்திற்கே ஆளாக்கி
பாதத்திற்கு ஆளாக்கி

B. ஆமா

A. உங்களுக்கு வந்ததொரு பாவி
வந்தா தொரு பாவி

B. ஆமா

A. இந்த பருதவிக்கோ நாளாச்சோ
பருதவிக்கோ நாளாச்சோ

B. ஆமா.

A. நீங்க பாவியுட வாசலுக்குஞ்சாமி
படுத்துறங்க வாரதெப்போ படுத்துறங்க
வாரதெப்போ

X

A. இந்த சிவப்புஞ்சைக்கிள் வண்டி
சிகப்புஞ்சைக்கிள் வண்டி

B. ஆமா.

A. நீங்க சிதம்பர போயிறங்கி

சிதம்பர போயிறங்கி

B. ஆமா.

A. சிதம்பர நடராஜரே

சிதம்பர நடராஜரே

B. ஆமா.

A. நீங்க சேவிச்சு நின்றீரோ

ஞசாமி சேவிச்சு நின்றீரோ

B. ஆமா

A. இந்த சிதம்பர நடராஜனும்

சிதம்பர நடராஜனும்

B. ஆமா.

A. இந்த தீர்க்கமுள்ள பிள்ளையென்று

தீர்க்கமுள்ள பிள்ளையென்று

B. ஆமா.

A. இவர் பாதத்துக்கே ஆளாக்கி

பாதத்துக்கே ஆளாக்கி

B. ஆமா.

A. உங்களுக்கு வந்த தொரு சீதை

வந்த தொரு சீதை

B. ஆமா.

A. [illegible]